






# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

**தலைமைக் கழகம்**

**எண் : 15, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014**

**தொலைப்பேசி : 044 - 2848 1235**


"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி: 02.10.2022

## தலைமைக் கழக அறிவிப்பு

**அனைத்துத் துறைகளிலும் முறைகேடு - மின் கட்டண உயர்வு -**
**தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமை :**

---

**தி.மு.க அரசின் மக்கள் விரோதப் போக்கினைக் கண்டித்து**
**தமிழகம் முழுவதும் அக்டோபர் 12ம் தேதி கண்டன ஆர்ப்பாட்டங்கள்!**
**சென்னையில் கழக பொதுச்செயலாளர் பங்கேற்கிறார்!**

துறைகள்தோறும் மலிந்து வரும் முறைகேடுகள், மக்களைப் பாதிக்கும் மின் கட்டண உயர்வு, தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் ஏமாற்றுதல், அமைச்சர்களின் அடாவடிப் பேச்சு உள்ளிட்ட **தி.மு.க அரசின் மக்கள் விரோத செயல்பாடுகளைக் கண்டித்து அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தமிழகம் முழுவதும் வரும் 12.10.2022** புதன் கிழமையன்று மாபெரும் **கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற உள்ளன.**

அன்றைய தினம் காலை 10 மணியளவில் **சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு** கழக பொதுச்செயலாளர் **திரு.டிடிவி தினகரன்** அவர்கள் **தலைமையேற்க உள்ளார்கள்.**

தலைமைக் கழகம்

அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

அதே நாளில், தமிழகம் முழுவதும் வருவாய் மாவட்டங்களில் தி.மு.க அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற உள்ளன. **அந்தந்த வருவாய் மாவட்டங்களுக்குட்பட்ட கழக மாவட்டங்கள் ஒன்றிணைந்து தி.மு.க அரசின் மக்கள் விரோதப் போக்கை கண்டிக்கும் ஆர்ப்பாட்டங்களை நடத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

சென்னை உட்பட தமிழகம் முழுவதும் நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டங்களில் தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக செயலாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், பகுதி, ஒன்றியம், நகரம், பேரூராட்சி, ஊராட்சி, வார்டு / வட்ட கழகம் மற்றும் கிளைக்கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**தலைமைக் கழகம்**
**அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்**